PUCL

# மக்கள் சிவில் உரிமைக் கழகம் (PUCL)

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி

மாநில அலுவலகம்: 123/ 255, மூன்றாவது தளம், ஹீசைனா மன்சில்,
அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-1. தொ.பே: 044-25352459.
மின்னஞ்சல்: gana.kurinji@gmail.com / saravananpucl@gmail.com

| | |
|---|---|
| **கண.குறிஞ்சி** | **க.சரவணன்** |
| **மாநிலத் தலைவர்** | **மாநிலப் பொதுச் செயலர்** |
| **94433-07681** | **97512-37734** |


**02.05.2019**

## பொன்பரப்பி தாக்குதல் குறித்த பியூசிஎல் உண்மையறியும் குழுவின் அறிக்கை

தமிழகத்தில் நாடாளுமன்றத் தேர்தல் நாளான 18.04.2019 அன்று, அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம் பொன்பரப்பியில், பட்டியல் சாதி மக்கள் வசிக்கும் பகுதியில் நடந்தத் தாக்குதல் அனைவரையும் அதிர்ச்சிகுள்ளாக்கியது. இது குறித்து களஆய்வு செய்து உண்மையை அறியும் பொருட்டு, மக்கள் சிவில் உரிமைக் கழகம் (PUCL)-தமிழ்நாடு & புதுச்சேரி சார்பாக, அமைப்பின் அகில இந்தியத் துணைத் தலைவர் பேரா. கோ. சரசுவதி அவர்களின் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழு 24.04.2019 அன்று பொன்பரப்பி கிராமத்திற்கு நேரில் சென்று, பட்டியல் சாதியைச் சார்ந்த மக்கள்; மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சார்ந்த படையாச்சி (வன்னியர்) மக்கள்; அதே பிரிவைச் சார்ந்த, அ.இ.அ.தி.மு.க பொறுப்பாளரான முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் ராம்குமார்; மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தாக்குதலுக்குள்ளானவர்கள்; அரசு அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து விவரங்களைச் சேகரித்தது.

### உண்மையறியும் குழு உறுப்பினர்கள்

1. பேரா. கோ. சரசுவதி, அகில இந்தியத் துணைத் தலைவர், பியூசிஎல்
2. திரு. க. சரவணன், மாநில பொதுச் செயலர், பியூசிஎல்-த.நா & புதுச்சேரி
3. திரு. செல்வமணியன், சமூகச் செயற்பாட்டாளர்
4. திரு. சு. அசன் முகமது, சமூகச் செயற்பாட்டாளர்
5. திரு. தமிழ் இளவரசன், சமூகச் செயற்பாட்டாளர்

### அனுமதி மறுப்பு

உண்மையறியும் குழுவினர் பொன்பரப்பியில் பட்டியல் சாதியைச் சார்ந்த மக்கள் வசிக்கும் காந்திநகர் பகுதிக்கு சென்ற உடனேயே, அங்கே முகாமிட்டிருந்த

காவல்துறையால் தடுத்து நிறுத்தப்பட்டனர். முதலில் பட்டியலின மக்கள் வசிக்கும் பகுதிக்குள் நுழையக் கூடாது என்றும், பிறகு குழுவிலிருந்து இருவர் மட்டுமே செல்லலாம் என்றும், 10 நிமிடங்கள் மட்டுமே அனுமதிக்க முடியும் என்றும், அடுத்து வீடியோ எடுக்கக் கூடாது என்றும், கடைசியில் குழுவுடன் காவல் அதிகாரி ஒருவர் வருவாரென்றும் அடுத்தடுத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இவை எதையும் ஒப்புக் கொள்ளாமல், மீண்டும் மீண்டும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருடன் தொலைபேசியில் பேசிய பிறகே, காவல் துறை, குழுவினர் உட்செல்ல அனுமதித்தது. இதே போன்று மற்ற சனநாயக அமைப்புக்களும் நெருக்கடி உருவானதாகத் தெரிய வருகிறது.

**சமூக, பொருளாதாரப் பின்புலம்**

பொன்பரப்பி ஊராட்சி, அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம் மற்றும் வட்டத்தில் அமைந்துள்ளது. 2011 சமூகப் பொருளாதாரக் கணக்கெடுப்பின்படி, செந்துறை வட்டத்தில், மொத்தமுள்ள குடும்பங்களில், 27.66% குடும்பங்கள் பட்டியல் சாதிகளையும், 1.07% பழங்குடி பிரிவையும், 71.26% பிற பிரிவையும் சார்ந்தவை[1]. மொத்தமுள்ள குடும்பங்களில், 33.51% குடும்பங்கள் விவசாயம் மூலமாகவும், 55.59% குடும்பங்கள் தினக்கூலி மூலமாகவும், குடும்ப வருமானத்தைப் பெறுகின்றன[2]. 9.06% குடும்பங்கள் நிலையான மாத வருமானம் உடையவை[3].

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, பொன்பரப்பி ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை 4754. இதில் பட்டியல் வகுப்பைச் சார்ந்தவர்கள் 824 பேர்([4])([5]). அதாவது, ஊராட்சியின் மொத்த மக்கள் தொகையில் 17.33% பேர் பட்டியல் சாதியைச் சார்ந்தவர்கள். பொன்பரப்பியில் பெரும்பான்மையானோர் மிகவும் பிற்படுத்தப்பட்ட படையாச்சி (வன்னியர்) பிரிவைச் சார்ந்தவர்கள். பட்டியல் சாதியைச் சார்ந்த பறையர், பிற பிரிவினரான முதலியார், ஆசாரியார், வண்ணார், பழங்குடியினரான இருளர் ஆகிய சமூகங்களைச் சார்ந்தவர்களும் இந்த ஊராட்சியில் வசிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் செம்மண் மிகுந்திருப்பதாலும், மானாவாரிப் பகுதி என்பதாலும், முக்கியமாக முந்திரி பெருமளவுப் பயிரிடப்படுகிறது. சித்திரை-ஆனி மாதங்களில் முந்திரிக் கொட்டைகளை எடுக்கும் பணி நடக்கும். அதற்கு முன் மூன்று மாதங்கள், முந்திரி மரங்களைப் பராமரிக்கும் பணிகள் இருக்கும். எனவே,

[1] https://secc.gov.in//statewiseTehsilCasteProfileReport
[2] https://secc.gov.in//statewiseTehsilMainSourceOfIncomeReport
[3] https://secc.gov.in//statewiseTehsilEmploymentAndIncomeReport
[4] https://www.tnrd.gov.in/databases/census_of_india_2011TN/pdf/21-Ariyalur.pdf
[5] http://www.censusindia.gov.in/pca/SearchDetails.aspx?Id=733645

பொதுவாக ஆண்டில் 6 மாத காலம் மட்டுமே, இந்தப் பகுதியில் விவசாய வேலைகள் இருக்கும். கிணறுகள், ஆழ்துளைக் குழாய்கள் மூலம் விவசாயம் செய்பவர்கள் மிகக் குறைவு. படித்துவிட்டு மாதவருமானம் பெறுபவர்களைத் தவிர்த்து, நிலமுள்ளவர்களாக இருந்தாலும், வன்னியப் பிரிவைச் சார்ந்த ஆண்கள் பெரும்பாலும், விவசாய வேலைகள் இல்லாத காலத்தில், தொழிலாளர்களாக கேரளா சென்றுவிடுவர். ஓரளவு வசதியும், திறன்களும் பெற்றுள்ள வன்னிய ஆண்கள், மத்தியக் கிழக்கு நாடுகளில் பணிபுரிகின்றனர்.

இந்தப் பகுதியின் பட்டியல் சாதி மக்கள் பொதுவாக நிலமற்றவர்கள். எனவே, இந்தப் பிரிவைச் சார்ந்த ஆண்கள், பெரும்பாலும் சென்னை கோயம்பேடு காய்கறிச் சந்தையில் சுமை தூக்கும் தொழிலாளர்களாகப் பணிபுரிகின்றனர். படித்துவிட்டு மாத வருமானம் பெறுபவர்கள் ஒரு சிலரே! ஊரில் இருக்கும் பெண்கள், முதியவர்கள் முந்திரிக் காட்டில் தினக்கூலிகளாக வேலை செய்கிறார்கள். மேலும், மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மூலமும், இவர்களுக்கு ஓரளவு வருமானம் கிடைக்கிறது. இது படையாச்சிப் பிரிவைச் சார்ந்த பெண்கள் மற்றும் முதியவர்களுக்கும் பொருந்தும். எனவே, பொருளாதார ரீதியாக இருதரப்புமே, உழைக்கும் வர்க்கம் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

**நிகழ்வுகள்: கால வரிசை**

18.04.2019 அன்று, காலை 8.30 மணியளவில் வாக்குச்சாவடியான பொன்பரப்பி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அருகில், வன்னிய இளைஞர்கள் சிலர் போதையில் பானையைப் போட்டு உடைத்துள்ளார்கள். அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் அவர்களைக் கண்டித்து, இதுபோன்று பிரச்னையை உருவாக்க வேண்டாம் என்று அறிவுறுத்தி கலைத்துள்ளார்கள்.

அதே இளைஞர்கள் மீண்டும் காலை 10.30 மணிக்கு, பொன்பரப்பி பேருந்து நிலையம் அருகில், விற்பனைக்கு வைத்திருந்த பானைகளைப் போட்டு உடைத்துள்ளார்கள். உள்ளூரைச் சார்ந்த தெய்வசிகாமணி, கனியரசு, ராஜா, சுப்பிரமணி ஆகியோர்தான் இந்தச் செயலில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு வைக்கப்படுகிறது. இதே நேரத்தில் அ.இ.அ.தி.மு.க சிதம்பரம் தொகுதி வேட்பாளர் பொ.சந்திரசேகர் வாக்குச் சாவடிக்கு வந்து சென்றுள்ளார். பானையை உடைத்த இளைஞர்களை வாக்குச் சாவடிக்கு அருகில் இருந்த பெண் காவல் அதிகாரி விரட்டியுள்ளார்.

பிறகு, வன்னியர் பிரிவைச் சார்ந்த சொக்கன் என்பவர், பிற்பகல் 2.30 மணியளவில், பட்டியல் சாதி மக்கள் வசிக்கும் பகுதியில் கடை வைத்துள்ள, மாற்றுத்திறனாளியான வன்னிய இளைஞர் வீரபாண்டியன் கடை முன்பு,

பானையைப் போட்டு உடைத்ததாகவும், அதைப்பார்த்த பட்டியல் சாதியைச் சார்ந்த குணசீலன், வீரபாண்டியனிடம், "உன் கடை முன்னாடி பானையை உடைக்கிறாங்க. நீ கேட்க மாட்டாயா?" என்று அவரைச் சீண்டியதாகவும், அதைத் தட்டிக் கேட்ட சொக்கனுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் தகவல் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், வீரபாண்டியனை பட்டியல் சாதியைச் சார்ந்த இளைஞர்கள் சிலர், விளையாட்டாகத் தலையில் தட்டி "பானைச் சின்னத்திற்கு ஓட்டு போட்டு விட்டு வா" என்று கூறியதாகவும், அதைப் பார்த்துக்கொண்டிருந்த வன்னிய இளைஞர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் இன்னொரு தகவலும் சொல்லப்படுகிறது. வீரபாண்டியன் அருகிலுள்ள மருவத்தூர் ஊராட்சியைச் சார்ந்த சேடைக்குடிக்காடு கிராமத்தைச் சார்ந்தவர். அவர் நடத்தி வரும் கடையில், சட்டத்துக்கு விரோதமாக மது விற்பனை தொடர்ந்து நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதைத்தொடர்ந்து, பிற்பகல் சுமார் 2.30 மணியளவில், வன்னிய இளைஞர்களான மணிமாறன், சத்ய சங்கர், குமார், சொக்கன் ஆகியோர் பட்டியல் சாதி மக்கள் வசிக்கும் காந்திநகர் நுழைவுப் பகுதியிலுள்ள விடுதலைச் சிறுத்தைகள் கொடிக்கம்பத்தை, இரும்பு பைப், சுத்தி ஆகியவற்றைக் கொண்டு அடித்ததாகவும், கொடிக்கம்பத்திற்கு அருகில் வன்னிய இளைஞர்கள் மீண்டும் பானையைப் போட்டு உடைத்ததாகவும் சொல்லப்படுகிறது. "காலையில பானையை உடைச்சதுக்கு அமைதியா இருந்தோம். இப்போ எங்க இடத்திலேயே வந்து பானையை உடைக்கறீங்களா?" என்று பட்டியல் சாதி மக்கள் கேள்வி எழுப்ப, மீண்டும் வாக்குவாதம் நடந்துள்ளது. இதைத்தொடர்ந்து இருதரப்பிலும் கைகலப்பும், கல் எறிதலும் நடந்ததாகத் தெரிகிறது. செய்தியை அறிந்த மருவத்தூர், சிறுகளத்தூர், பொன் குடிக்காடு மற்றும் பொன்பரப்பி கிராமங்களைச் சார்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட வன்னியர்கள், பட்டியல் சாதி மக்கள் வசிக்கும் பகுதியில் திரண்டு அவர்கள் மேல் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதல் சுமார் 40 நிமிடங்களிலிருந்து ஒரு மணி நேரம் வரை நடந்ததாகக் கூறப்படுகிறது.

தாக்குதல் நடந்த போது மிகக் குறைந்த அளவே காவல்துறையினர் அங்கு இருந்திருக்கின்றனர். பொன்பரப்பியிலிருந்து, 10 கிலோ மீட்டருக்கும் குறைவான தொலைவில் உள்ள செந்துறையில் மத்திய ஆயுதம் ஏந்திய காவல் துறையினர் (CAPF) இருந்தபோதும், அவர்கள் பொன்பரப்பியை அடைய ஒரு மணி நேரம் ஆகியுள்ளது. அதற்குள் தாக்குதல் பெரும்பாலும் முடிவடைந்துள்ளது. காவல்துறை வந்தவுடன், தாக்குதல் நடத்தியவர்கள் சுற்றிலும் உள்ள முந்திரிக் காடுகளில் சிதறி ஓடித் தப்பித்துள்ளனர்.

உண்மை அறியும் குழுவிடம் பேசிய வன்னியர் பிரிவைச் சார்ந்த பெண்கள், பிற்பகல் 2.30 மணியளவில் பட்டியலின மக்கள் கல்லெறிந்த நிகழ்வைத் தொடர்ந்து, வன்னியர் பிரிவைச் சார்ந்த சுப்பிரமணி பட்டியலின இளைஞர்களால்

தாக்கப்பட்டு அவருடைய மண்டை உடைந்ததாகவும், இன்னொருவருக்கு காயம்பட்டதாகவும், என்னவென்று பார்க்கச் சென்ற தங்களைத் தாக்க, 60க்கும் மேற்பட்ட பட்டியலின ஆண்கள் சாலையை கடந்து, வன்னியர் பகுதி தொடங்கும் அரசு மாணவியர் விடுதி வரை துரத்தி வந்ததாகவும், மேலும் ஆடையை உயர்த்திக் காட்டித் தகாத வார்த்தைகளைக் கூறித் தங்கள் கண்ணியத்தைப் பாதிக்கும் வகையில் வசை பாடியதாகவும் தெரிவித்தனர். பட்டியல் சாதி மக்கள் மீது நடந்த தாக்குதலை வீடியோ எடுத்த காவல்துறை, தங்களுக்கு நடந்த விஷயங்களை வீடியோ எடுக்க அக்கறை காட்டவில்லை என்றும் அவர்கள் குற்றம் சாட்டினர்.

தாக்குதலுக்குள்ளான சுப்பிரமணியின் மனைவி அசோதை காவல்துறையில் கொடுத்த புகாரின் படி, செந்துறை காவல் நிலையத்தில் வழக்கு பதியப்பட்டுள்ளது. அதன் முதல் தகவல் அறிக்கை (76/19)யில், 18.04.2019 அன்று அரசு மேல்நிலைப் பள்ளியில் தாங்கள் வாக்களித்துவிட்டு வீடு திரும்பும் போது, பிற்பகல் சுமார் 3.00 மணியளவில், பொன்பரப்பி அரசினர் மாணவியர் விடுதி அருகில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த இளைஞர்கள் "பானைச் சின்னத்திற்கு ஓட்டு போடுங்கள்" என்று சாலையில் செல்வோரை வற்புறுத்தியதாகவும், அதைத் தட்டிக் கேட்ட வன்னியர் பிரிவைச் சார்ந்த சுப்பிரமணி மற்றும் வீரமணி மகன் கமலக்கண்ணன் ஆகியோர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், அதில் இரும்பு பைப்பால் அடித்ததில் சுப்பிரமணியின் மண்டை உடைந்துள்ளதாகவும், அவரைக் காப்பாற்றச் சென்ற கமலக்கண்ணன் உடைந்த பாட்டிலால் குத்தப்பட்டு நெஞ்சில் காயம் ஏற்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதைத் தடுக்கச் சென்ற பொதுமக்கள் மீது தாக்குதல் நடந்ததாகவும், சுமார் 4 லட்சத்திற்கும் மேல் மதிப்புள்ள இரு சக்கர வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டதாகவும், சுப்பிரமணியின் செல்போன் பறிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து சுப்பிரமணி மற்றும் கமலக்கண்ணன் ஆகிய இருவரும் பொன்பரப்பி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக முதல் தகவல் அறிக்கைத் தெரிவிக்கிறது.

தாக்குதல் நடந்த பொன்பரப்பியில் காந்திநகர் பகுதியிலும், அருகேயுள்ள இன்னொரு பகுதியிலும் பட்டியலின மக்கள் வசிக்கிறார்கள். அதற்கு எதிர்ப்புறம் வன்னியர் மக்கள் வசிக்கும் ஒரு பகுதியுள்ளது. இந்த இரு தரப்பையும் பொன்பரப்பி முக்கிய சாலை இரண்டாகப் பிரிக்கிறது.

மாலை சுமார் 4.00 மணி அளவில், தாக்குதல் குறித்து செய்தி சேகரிக்க வந்த நியூஸ் 18 நிருபர் கலைவாணன், த/பெ. மூக்கன், தான் பட்டியல் சாதியைச் சார்ந்த இளைஞர்களால் தாக்கப்பட்டு அரியலூர் அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக செந்துறை காவல்துறையிடம் புகார் தெரிவித்துள்ளார்.

முள்ளுக்குறிச்சி வாக்கு சேகரிப்பின் போது, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் பற்றி தவறான செய்தி வெளியிட்டார் என்று, கோபமடைந்த இளைஞர்கள் அவரைத் தாக்கினர் என்று பட்டியல் சாதியைச் சார்ந்த வேறு சில இளைஞர்கள் கூறுகின்றனர் (ஆனால், கலைவாணன் அந்தச் செய்திக்கும் தனக்கும் தொடர்பில்லை என்று முற்றிலும் மறுக்கிறார்). கலைவாணன் அவர்களும் பட்டியல் சாதியைச் சார்ந்தவர் என்றும், அது தெரிந்தும் அவர் தாக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. திரு. கலைவாணன் அவர்களுக்கு இடது கண்ணில் ரத்தக் கட்டுடன் வீக்கம் ஏற்பட்டதாக முதல் தகவல் அறிக்கைத் தெரிவிக்கிறது. அவர் இன்னும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

**தாக்குதல் ஏற்படுத்திய பாதிப்புக்கள்**

பட்டியல் சாதி மக்கள் வசிக்கும் பகுதியில், 60-65 வீடுகள் சேதப்படுத்தப்பட்டதாகவும், 12 இருசக்கர வாகனங்கள் தாக்கப்பட்டதாகவும், 12-14 பேர் மீது கடுமையான தாக்குதல் நடந்ததாகவும் அங்கு வசிக்கும் மக்கள் கூறுகிறார்கள். அந்தப் பகுதியில் வீடுகள் பெரும்பாலும் ஓடு மற்றும் சிமெண்ட் ஷீட் வேய்ந்த கூரைகளைக் கொண்டிருக்கின்றன. இந்த ஓடுகள் மற்றும் சிமெண்ட் ஷீட்கள் வெவ்வேறு அளவில் உடைத்து நொறுக்கப்பட்டுள்ளன. மீட்டர் பெட்டி, செப்டிக் டேங்கிலிருந்து வெளியேறும் சிமெண்ட் குழாய் ஆகியவையும் உடைந்துள்ளன. வீட்டுச்சுவரில் வரையப்பட்டிருந்த பானைச் சின்னம் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் அவர்களின் உருவம் ஆகியவற்றை அழிக்கும் முயற்சிகள் நடந்ததாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் குறிப்பிடுகின்றனர். பானைச் சின்னம் தாங்கிய பேனர்களும் கிழிக்கப்பட்டதாக மக்கள் தெரிவித்தனர். மக்கள் வீடுகளுக்குள் சென்று ஒளிந்து கொண்டதால், உள்ளே இருந்த பொருட்கள் பெரும்பாலும் தாக்கப்படவில்லை. மூங்கில் வாரை, இரும்பு பைப், மரச்சட்டம் ஆகியவற்றைக் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. பெட்ரோல் குண்டு கொண்டு வரப்பட்டதாகவும், ஆனால், இருசக்கர வாகனம் ஒன்றில் முயற்சித்தும் அது பற்றவில்லை என்றும் பட்டியல் சாதி இளைஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

தாக்குதலில், வடிவேல் மகன் ரவி என்பவர் மூன்று புளிய மரம் கேணிமேட்டு ஏரிப்பகுதியில் கடுமையாக தாக்கப்பட்டு, தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவருக்கு கை, மண்டை, வயிற்றுப் பகுதியில் பலத்தக் காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. மூங்கில் வாரை, மரச்சட்டம் ஆகியவற்றைக் கொண்டு தாக்கியுள்ளார்கள். இவரை ஏரித் தண்ணீரிலேயே அழுத்தி அடித்ததாகவும்

சொல்லப்படுகிறது. இந்த ஏரி, பட்டியலின மக்கள் வசிக்கும் பகுதியை ஒட்டியே உள்ளது.

ரவியின் தந்தையான வடிவேல், ஏரிக்கரையில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்திருக்கிறார். அடிதடி நடக்கிறதே என்று பார்க்க வந்தவரை இரும்புக் கம்பியால் அடித்திருக்கிறார்கள். அவரின் இடது கை கட்டைவிரலின் எலும்பு உடைந்து, அறுவை சிகிச்சைக்காக அரியலூர் அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அதே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சம்பத்துக்கு வலது காலில் பலத்த அடி. கால் வீங்கிப் போய், இப்போதுதான் வீக்கம் வற்றியுள்ளது. கலவரம் நடப்பதை அறிந்து பட்டியல் சாதி மக்கள் வசிக்கும் குடியிருப்பின் பின்பக்கமாக இருசக்கர வாகனத்தில் வந்த சம்பத்தை, சுற்றியுள்ள முந்திரிக் காட்டிலிருந்து ஓடி வந்த 7-8 பேர் தாக்கியுள்ளனர். இவர் கோயம்பேடு காய்கறிச் சந்தையில் மூட்டைத் தூக்கி பிழைப்பு நடத்துகிறார். இவர், தேர்தல் நாளன்று பேருந்து கிடைக்காமல், வாக்களிப்பதற்காகச் சென்னையிலிருந்து லாரியில் வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அன்பழகன், த/பெ. மொட்டையன் மற்றும் கிருஷ்ணமூர்த்தி, த.பெ. சின்னசாமி. ஆகியோரும் அரியலூர் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

மேலும், தாக்குதல் நடந்த போது, கயிற்றுக் கட்டிலிலிருந்த 98 வயதான மூதாட்டியான பெரியநாயகம், க/பெ. கருப்பன் அவர்களைக் கட்டிலோடு புரட்டிப் போட்டுள்ளார்கள். வயிற்றுப் பகுதியில் இன்னமும் வலியுள்ளதாகச் சொன்ன அவர், கலவரத்திற்குப் பிறகு அரசு நடத்திய மருத்துவமுகாமில்தான் சிகிச்சைப் பெற்றுள்ளார்.

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலை வணிகவியல் படிக்கும் 20 வயதான வெற்றிவேல், த/பெ. பஞ்சன் என்ற மாணவரும் தாக்குதலுக்குள்ளாகி இருக்கிறார். அவருக்கு வலது பக்க கண்ணில் பலத்த அடி விழுந்துள்ளது. கே. சின்னையன், த/பெ. குமரன், வயது 60 என்பவருக்கு தாக்குதலில் இடது கை உடைந்து கட்டுப் போடப்பட்டுள்ளது.

இவர்கள் தவிர்த்து, (1) செல்வ கணபதி, த/பெ. கருப்பன், (2) அஜய், த/பெ. குணசீலன், (3) செல்வராசு, த/பெ. மாணிக்கம், (4) பிரகாஷ், த/பெ. நாயத்தான், (5) மணிமேகலை, த/பெ. கருப்பன், (6) பிரபு, த.பெ. லெட்சுமணன், (7) கௌதமி, த/பெ. பிரித்தி, (8) ராஜேந்திரன், த/பெ. குள்ளான் ஆகியோரும் கொடுங்காயங்களுடன் பாதிக்கப்பட்டதாக, பட்டியல் சாதி சார்பாக குணசீலன், த/பெ. ரத்தினம் காவல்துறையிடம் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கை (74/19) கூறுகிறது.

**நிவாரணப் பணிகள்**

உண்மையறியும் குழு தாக்குதல் நடந்து 6 ஆம் நாள், 24.04.2019 அன்று பொன்பரப்பி சென்றது. அதற்குள் மிக விரைவாகத் தாக்குதலுக்கு உள்ளான ஏறத்தாழ அனைத்து வீடுகளும் ஓடுகள் மாற்றப்பட்டும், சிமெண்ட் ஷீட்கள் பொருத்தப்பட்டும் பழுது பார்க்கப்பட்டுவிட்டன. மாநில அரசின் உத்தரவின்படி, மாவட்ட ஆட்சியர் மேற்பார்வையில், மாவட்ட ஊரக மேம்பாட்டு முகமை (DRDA), பழுதுபார்க்கும் பணிகளைச் செய்துள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இதற்கான நிதியை அளித்துள்ளது. அதேபோல், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ், மாவட்டக் காவல்துறை, இதுவரை பாதிக்கப்பட்ட 9 பேருக்கு தலா 50,000 ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கியுள்ளது[6]. நேரடியாக 6 பேருக்கு வங்கிக் கணக்கிலும், 3 பேருக்கு காசோலையாகவும் இந்த நிதியுதவி அளிக்கப்பட்டதாகவும், ஒருவருக்கு வங்கிக் கணக்கே இல்லையென்பதால் நிதியுதவி கிடைக்க தாமதமாகிறது என்றும் பட்டியல் சாதியைச் சார்ந்த தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

**எழுப்பப்படும் சந்தேகங்கள்**

18.04.2019 அன்று மதியம் சுமார் 1.50 மணியளவில், வன்னியர் சங்க மாநிலப் பொறுப்பாளர் திரு. வைத்தி அவர்களை, பொன்பரப்பி பேருந்து நிலையத்தில் பார்த்ததாகச் சில பட்டியா சாதி இளைஞர்கள் கூறுகின்றனர். அவருக்கும், நடந்த தாக்குதலுக்கும் தொடர்பு இருப்பதாகவும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் வன்னியர் தரப்பிலோ, திரு. வைத்தி அவர்கள் சுமார் 3.00-3.30 மணியளவில் பொன்பரப்பி வந்ததாகவும், அவர் வந்தபிறகே தாக்குதல் கட்டுக்குள் வந்ததாகவும் தெரிவிக்கின்றனர்.

அதேபோல், அரியலூர் மாவட்ட இந்து முன்னணிப் பொறுப்பாளர் ராஜசேகருக்கு இந்தத் தாக்குதலில் தொடர்பிருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டையும் நம்மால் உறுதி செய்யமுடியவில்லை. அவர் அன்று தற்போது வசிக்கும் ஸ்ரீபெரும்புதூரிலேயே ஓட்டு போட்டுவிட்டு, வெளியூரில் ஒரு நிகழ்ச்சிக்குச் சென்று விட்டதாக, வன்னியர் பகுதியிலிருப்பவர்கள் சொல்கிறார்கள். ஆனால், அவருடன் இருக்கும் நண்பர்கள் சிலர், பட்டியல் சாதி மக்கள் மீதான தாக்குதலில் ஈடுபட்டதாக இருதரப்பிலுமே சொல்கிறார்கள். ராஜசேகர் அரியலூர் மாவட்டம் சிறுகடம்பூர் தலித் சிறுமி நந்தினி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் என்பது குறிப்பிடத் தக்கது.

---

[6] https://www.thehindu.com/news/national/tamil-nadu/violence-hit-ponparappi-limps-back-to-normality/article26915825.ece

**அதிகாரிகளுடன் சந்திப்பு**

உண்மையறியும் குழு 24.04.2019 அன்று மாலை, மாவட்ட ஆட்சியர் திருமிகு. மு.விஜயலட்சுமி இ.ஆ.ப. அவர்களையும், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திருமிகு. வி.ஆர். ஸ்ரீனிவாசன் இ.கா.ப அவர்களையும் தனித்தனியே நேரில் சந்தித்து, பொன்பரப்பி சம்பவம் குறித்து விளக்கத்தைப் பெற்றது. தன்னுடைய ஆலோசனைகளையும் அதிகாரிகளுக்கு வழங்கியது.

நிவாரணப் பணிகளைத் துரிதமாக செய்து முடித்த மாவட்ட நிர்வாகத்திற்கு தன்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்த உண்மையறியும் குழு, பட்டியல் சாதி மக்களின் கருத்துக்களை மாவட்ட ஆட்சியரிடம் பகிர்ந்து கொண்டது. பொன்பரப்பி பட்டியல் சாதி மக்களின் கோரிக்கையை ஏற்று, அவர்கள் வசிக்கும் பகுதியிலேயே, பொது விநியோகக் கடையைச் செயல்படுத்த வேண்டுமென ஏற்கனவே தான் அரசுக்கு அறிக்கை அனுப்பியுள்ளதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார். பொன்பரப்பி அரசு மேல்நிலைப் பள்ளியில் சாதிப் பாகுபாடு பார்க்கப்படுவதாகவும், அதனால் தங்கள் பகுதியிலேயே ஒரு மேல்நிலைப் பள்ளி அமைக்க வேண்டும் என்றும் பட்டியல் சாதி மக்கள் குறிப்பிடுவதாக உண்மையறியும் குழு சொன்னதை மாவட்ட ஆட்சியர் ஏற்றுக் கொள்ளவில்லை. தனக்குத் தெரிந்து அப்படி பாகுபாடு பார்க்கப்படுவதில்லை என்றும், இருப்பினும் அது குறித்து விசாரித்து நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார். பட்டியல் சாதி மக்களின் பொருளாதாரச் சுதந்தரத்தை உறுதி செய்யும் வகையில், உள்ளூரிலேயே அவர்களின் வாழ்வாதாரத்திற்கு வழிவகை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை, குழு மாவட்ட ஆட்சியரிடம் முன் வைத்தது. பொன்பரப்பி தாக்குதல் குறித்தோ, 22.04.2019 அன்று மாவட்ட ஆட்சியருடன் இருதரப்பும் கலந்து கொண்ட அமைதிப் பேச்சு வார்த்தை குறித்தோ, அவர் கருத்துக்களைத் தெரிவிக்கவில்லை. தான் பொன்பரப்பி சம்பவம் குறித்து கண்காணித்து வருவதாகவும், அது குறித்து முடிவுக்கு வர இன்னும் காலம் தேவை என்றும் அவர் தெரிவித்தார்.

மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர் உண்மையறியும் குழு கண்டறிந்த விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். 18.04.2019 அன்று பொன்பரப்பியில் காலையில் பானை உடைப்பு நடந்தது குறித்துத் தனக்குத் தெரியாது என்றும், அது குறித்து விசாரிப்பதாகவும் அவர் தெரிவித்தார். அவரும் பொன்பரப்பி தாக்குதல் குறித்து தன்னுடைய பார்வையை பகிர்ந்துகொள்ளவில்லை. தொடுக்கப்பட்ட வழக்குகளின் விவரங்களை மட்டும் குழுவிடம் பகிர்ந்துகொண்டார். சனநாயக அமைப்புக்கள், பாதிக்கப்பட்ட பட்டியல் சாதி மக்கள் வசிக்கும் பகுதிக்கு செல்லமுடியாமல் காவல்துறைத் தடுப்பது சனநாயக விரோதமானது என்றும், அதைக் காவல்துறை உடனடியாகக் கைவிடவேண்டும் என்றும் மாவட்டக்

காவல்துறைக் கண்காணிப்பாளரைக் குழு கேட்டுக் கொண்டது. இறுதியில், பொன்பரப்பியில் சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க பியூசிஎல் உதவ வேண்டுமென்று அவர் உண்மையறியும் குழுவைக் கேட்டுக் கொண்டார்.

**வழக்குகள்**

1. தாக்குதலுக்கு உள்ளான பட்டியல் சாதி மக்கள் சார்பில் குணசீலன், த/பெ. இரத்தினம் அவர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில், செந்துறை காவல் நிலையம் வழக்கு பதிவு செய்து, அரியலூர் மாவட்ட அமர்வு முதன்மை நீதிபதிக்கு, முதல் தகவல் அறிக்கையை (74/19) அனுப்பியுள்ளது. பா.ம.க கட்சியைச் சார்ந்த வன்னியர்கள் 24 பேர் மற்றும் அடையாளம் தெரிந்த நபர்கள் தாக்குதல் நடத்தியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இந்திய தண்டனைச் சட்டம் 1860, பிரிவுகள் 147, 148, 294 (b), 341, 323, 324, 307, தமிழ்நாடு பொதுச்சொத்து (சேதம் & இழப்பைத் தடுத்தல்) சட்டம் 1992, பிரிவு 3, பெண்களைத் துன்புறுத்தல் தடுப்புச் சட்டம் 2002, பிரிவு 4, பட்டியல் சாதி மற்றும் பட்டியல் பழங்குடிகள் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம், 2015 பிரிவுகள் 3 (1) (r), 3 (1) (s), 3 (2) (va) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை வன்னியர் பிரிவைச் சார்ந்த 12 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களைப் பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை-1 ல் கொடுக்கப்பட்டுள்ளன.
2. மறுதரப்பில், சுப்பிரமணியின் மனைவி அசோதை கொடுத்த புகாரின் அடிப்படையில், செந்துறை காவல் நிலையம் வழக்கு பதிவு செய்து, அரியலூர் குற்றவியல் நீதித்துறை நடுவர், குற்றவியல் நீதிமன்றம் II அவர்களுக்கு முதல் தகவல் அறிக்கையை (76/19) அனுப்பியுள்ளது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த 25 பேர் மற்றும் பலர் தாக்குதல் நடத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்திய தண்டனைச் சட்டம் 1860, பிரிவுகள் 147, 148, 294 (b), 341, 324, 307, 506 (2), தமிழ்நாடு பொதுச்சொத்து (சேதம் & இழப்பைத் தடுத்தல்) சட்டம் 1992, பிரிவு 3 ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் பட்டியல் சாதியைச் சார்ந்த குணசீலன், த/பெ. ரத்தினம் என்பவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.
3. தாக்குதலுக்குள்ளான நியூஸ் 18 பத்திரிக்கையாளர் கொடுத்த புகாரின் அடிப்படையில், செந்துறை காவல் நிலையம் வழக்கு பதிவு செய்து, அரியலூர் மாவட்ட குற்றவியல் நீதித்துறை நடுவர், குற்றவியல் நீதிமன்றம் II அவர்களுக்கு முதல் தகவல் அறிக்கையை (75/19) அனுப்பியுள்ளது. மருவத்தூரைச் சார்ந்த தலித் வெற்றி, நத்தக்குழியைச் சார்ந்த கருணாநிதி, பொன்பரப்பி காலனித் தெருவைச் சார்ந்த கலைராஜன் ஆகியோர்

குற்றவாளிகளாக இந்த வழக்கில் இணைக்கப்பட்டுள்ளனர். இந்திய தண்டனைச் சட்டம் 1860, பிரிவுகள் 294 (b), 323, 307, 506 (1) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்குகள் சம்பந்தப்பட்ட சட்டப்பிரிவுகள் குறித்த விளக்கங்கள் பிற்சேர்க்கை-2 ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**உண்மையறியும் குழு கண்டறிந்தவை**

1. பட்டியல் சாதியைச் சார்ந்த மக்கள் வசிக்கும் காந்திநகர் பகுதியில், வீடுகள், வாகனங்கள், பட்டியல் சாதியைச் சார்ந்தவர்கள் மீது கடுமையானத் தாக்குதலை நடத்தியுள்ளனர், பொன்பரப்பி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களைச் சார்ந்த வன்னியர்கள். மாறாக, வன்னியர் பகுதியில் வீடுகளோ, உடைமைகளோ சேதப்படுத்தப்படவில்லை. வன்னியர் பிரிவைச் சார்ந்த சுப்பிரமணி மற்றும் கமலக்கண்ணன் ஆகியோர் மீது மட்டுமே தாக்குதல் நடந்ததற்கான குற்றச்சாட்டுக்கள் உள்ளன. எனவே, இதை இருதரப்புக் கலவரம் என்று கூறுவதை விட, பட்டியல் சாதியினர் மீதானத் தாக்குதல் என்று கூறுவதே பொருந்தமானதாக இருக்கும்.
2. பானை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு.தொல்.திருமாவளவனின் சின்னம் என்பதால், அதை உடைப்பதன் மூலம் எதிர்த் தரப்பின் கோபத்தைத் தூண்டிவிட முடியும் என்ற புரிதலுடனேயே, 18.04.2019 அன்று சம்பவங்கள் நடந்துள்ளன. காலையிலிருந்து எதிர்த் தரப்பால் குறைந்தது மூன்று முறை பானைகள் உடைக்கப்பட்டுள்ளன. இதுவே இருதரப்பினர் மோதிக் கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. பானையை உடைக்க வேண்டும் என்ற முடிவு தற்செயலானது அல்ல என்றே உண்மையறியும் குழு முடிவுக்கு வரவேண்டியுள்ளது.
3. பானையை உடைத்து கலவரத்தைத் தூண்டுவதன் மூலம், பட்டியல் சாதியினர் வாக்களிப்பதைத் தடுக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது என்பதை ஒரேயடியாக மறுக்க முடியவில்லை. காலை பானை உடைப்புச் சம்பவத்திற்குப் பிறகு, பட்டியல் சாதியைச் சார்ந்தவர்கள் குழுக்களாகச் சென்று வாக்களித்தனர் என்பதையும், தாக்குதல் நடக்கத் தொடங்கிய பொழுது ஏறத்தாழ 5/6 பங்கு பட்டியல் சாதியினர் வாக்களித்து விட்டனர் என்பதையும் இங்குக் குறிப்பிட்டாக வேண்டும். பட்டியல் சாதியில், 97 பேர் மட்டுமே வாக்களிக்கவில்லை.
4. இருதரப்பிலும், வெளியூரில் வேலை செய்பவர்களே தாக்குதலில் முனைப்புடன் செயல்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. தினசரிப் பழக்கமோ, நேரடி மனித உறவோ இல்லாதவர்களைத் தாக்குவது மனவியல்

அடிப்படையில் அவ்வளவு கடினமான விஷயமில்லை. குறிப்பாக, முகமறிந்தவர்களை தாக்காமல் விட்டுவிட்டதும் நடந்திருக்கிறது. ஒருபுறம், நகரங்களில் வேலை செய்யும் பட்டியல் சாதியைச் சார்ந்த இளைஞர்கள், தங்கள் அரசியல் உரிமைகளைப் பற்றி அதிகம் அறிந்திருக்கவும், பொருளாதாரத்திற்காக மற்றவர்களைச் சார்ந்திருக்கும் தேவையில்லாததால், தங்கள் மீதான உரிமை மீறலைத் தட்டி கேட்கும் துணிச்சலுடன் இருக்கவும் வாய்ப்புள்ளது. நகரங்களுக்குச் சென்று பணியாற்றினாலும் வன்னிய இளைஞர்கள் தங்கள் ஆதிக்க மனோபாவத்தை விடாமல், கிராமங்களுக்கு வருகையில், சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதை வெளிப்படுத்துகிறார்கள் என்றே கருத வேண்டியுள்ளது. உள்ளூரிலேயே வசிக்கும் இருதரப்பினருமே, ஒருவரை ஒருவரைச் சார்ந்திருக்க வேண்டியத் தேவையுள்ளதால், அவர்கள் தங்களுக்குள் ஏற்படும் முரணை ஊதிப் பெரிதாக்கும் வாய்ப்பு குறைவு. கடந்த 30 வருடங்களில் இருதரப்பினருக்கும் இடையில் கலவரம் எதுவும் நடந்ததில்லை என்ற செய்தி இதை உறுதி செய்கிறது.

5. மேலும், ஒருதரப்பைப் பற்றி இன்னொரு தரப்பு, சமூக ஊடகங்களில் பரப்பும் அவதூறுச் செய்திகளைப் பார்க்கும் வாய்ப்பு இருதரப்பு இளைஞர்களுக்குத்தான் அதிகமுள்ளது. இவர்களே அந்தந்தச் சமுகங்களின் கருத்துருவாக்கத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். சமூக ஊடகங்கள் மூலம், சாதிமுரணுக்கு தூபம் போடும் போக்கு இருதரப்பு இளைஞர்கள் மத்தியிலுமே உள்ளது.
6. தாக்குதலைத் தாண்டி பெண்களின் கண்ணியத்தைப் பாதிக்கும் வகையிலான வசைபாடல்கள்/ செயல்களுக்கு இருதரப்பு ஆண்களுமே காரணம். சாதிய மனோபாவத்தைப் போலவே பெண்ணை அடிமையாகப் பார்க்கும் மனோபாவமும் இன்னும் முடிவுக்கு வராத சமூகத் தீமையாக உள்ளது.
7. பல காலமாக வன்னியர் இளைஞர் வீரபாண்டியன் கடையில், சட்டத்திற்குப் புறம்பாக மது விற்பனை நடந்து வந்துள்ளது. இதற்கு காவல்துறையே முழுப் பொறுப்பேற்க வேண்டும். தேர்தல் நாளன்றும் தடையின்றி மதுவிற்பனை நடந்துள்ளது. காலையிலிருந்து மாலை வரை நடந்த சம்பவங்களுக்கு இரு தரப்பு இளைஞர்களுமே மதுபோதையில் இருந்தது மிக முக்கியக் காரணம்.
8. தேர்தல் நாளாக இருந்ததால், இரு தரப்பிலுமே அரசியல் மற்றும் சமூக ரீதியான முக்கிய நபர்கள், வாக்குச் சாவடியிலும், தேர்தல் சம்பந்தப்பட்ட வேலைகளிலும் ஈடுபட்டிருந்ததும், தாக்குதல் உடனடியாகக் கட்டுக்குள் வராமல் போனதற்குக் காரணம்.

9. இதுபோன்ற தாக்குதல்களில் செய்தி சேகரிக்கச் செல்லும் பத்திரிக்கையாளர்களின் உயிருக்கும், உடைமைக்கும், கலவரக்காரர்களால் அச்சுறுத்தல் உருவாவது வாடிக்கையாகி வருகிறது. எந்தச் சூழலிலும் பத்திரிக்கையாளர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்பதே பொதுச் சமூகத்தின் எதிர்பார்ப்பு.

10. தாக்குதல் நடக்கத் தொடங்கி, ஏறத்தாழ 1 மணி நேரம் பொறுத்தே, தாமதமாக, செந்துறையிலிருந்து மத்திய ஆயுதம் ஏந்திய காவல் துறையினர் (CAPF) தாக்குதல் நடந்த பகுதியை அடைந்தனர். அதன் பிறகே நிலைமை கட்டுக்குள் வந்தது. தாக்குதல் நடக்கும் பகுதியில் ஏற்கனவே இருந்த சொற்பக் காவலர்களும் தாக்குதலைத் தடுக்க ஏதும் செய்ததாகத் தெரியவில்லை. காலையில் நடந்த பானை உடைப்பு சம்பவங்கள் அங்கு பணியிலிருந்த காவல் துறையினருக்குத் தெரிந்திருந்தும், அது உயரதிகாரிகளுக்குச் சொல்லப்படவில்லை. தேர்தல் நாளில், பேருந்து நிறுத்தத்திற்கு அருகில், பானையை விற்பனையைத் தடை செய்திருக்கலாம். அதையும் காவல்துறை செய்யவில்லை. எனவே, தாக்குதலுக்கு காவல்துறையின் பொறுப்பின்மையும் ஒரு முக்கியக் காரணம்.

11. தடையுத்தரவு பிறப்பிக்கப் படாதச் சூழலில், தாக்குதல் நடந்த 1 வாரத்திற்குப் பிறகும் கூட, பாதுகாப்பைக் காரணம் கூறி, காவல்துறை சனநாயக அமைப்புக்களை, பாதிப்புக்குள்ளான பட்டியல் சாதி மக்கள் வசிக்கும் பகுதிகளுக்குச் செல்லவிடாமல் தடுப்பது, காவல்துறையினரின் அப்பட்டமான எதேச்சதிகார மனோபாவத்தையே காட்டுகிறது. இது முற்றிலும் கண்டிக்கப்பட வேண்டிய சனநாயக விரோதச் செயல்.

**பரிந்துரைகள்**

1. 18.04.2019 அன்று காலையிலிருந்து மாலை வரை நடந்த சம்பவங்களில் (காலை 8.30 மணி, 10.30 மணி பானை உடைப்புகள், மாற்றுத்திறனாளி வீரபாண்டியனின் கடையில் நடந்தவை, மதியம் 2.30 மணியளவில் கொடிக்கம்பத்திற்கு அருகில் பானை உடைப்பு, அதைத் தொடர்ந்த தாக்குதல்) தொடர்புடையவர்கள் அனைவரையும் காவல்துறை விசாரித்து, குற்றவாளிகள் மீது தகுந்த பிரிவுகளின் கீழ் வழக்குகள் பதிவு செய்யவேண்டும்.

2. 18.04.2019 அன்று காலையிலிருந்து மாலை வரை பொன்பரப்பியில் காவல்துறையின் செயல்பாடுகள் போதுமானதாக இருந்ததா என்பது குறித்தும், இருதரப்பும் மோதிக் கொள்ளும் வாய்ப்புள்ள தொகுதி என்பதால் (சிதம்பரம் தொகுதியில் திரு. தொல். திருமாவளவன் வாக்கு சேகரிக்க

சென்ற கிராமங்கள் சிலவற்றில், அவர் எதிர்த்தரப்பால் தடுத்து நிறுத்தப்பட்டார்; பொன்பரப்பியிலேயே இருதரப்பு கட்சிகளும், எதிர்த்தரப்புப் பகுதிகளுக்கு வாக்கு சேகரிக்கச் செல்லும் போது தடுத்து நிறுத்தப்பட்டன), மாவட்ட உளவுத்துறைக்கு தாக்குதல் நடக்கப்போவது குறித்து தகவல் இருந்ததா என்பது குறித்தும், மாவட்டக் காவல்துறை எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன என்பது குறித்தும், ஒரு முழுமையான விசாரணைக்கு, காவல்துறைத் தலைமை இயக்குனர் (DGP) உத்தரவிடவேண்டும். விசாரணை, குறித்தக் காலத்தில் முடிக்கப்பட்டு அதன் முடிவுகள் பொதுவெளியில் வைக்கப்பட வேண்டும்.

3. தாக்குதலின் காரணமாக இருதரப்பிலும் தங்களுடைய சனநாயகக் கடமைகளை ஆற்றவியலாத பொன்பரப்பி மக்கள் வாக்களிக்க, தேர்தல் ஆணையம் வழி வகை செய்ய வேண்டும். இது உடனடியாகச் செய்ய வேண்டிய பணி என்பதுடன், இதன் மூலம் சனநாயகத்தின் மீதான நம்பிக்கையைத் துளிர்க்கச் செய்யவியலும்.
4. இருதரப்பிலும் காயம்பட்டவர்களைத் தொடர்ந்து கண்காணித்து அவர்கள் முழுமையாக குணமாகும் வரை, வீடு திரும்பியிருந்தாலும் அரசு தொடர் சிகிச்சையளிக்க வேண்டும். இதற்கான முழுச் செலவையும் அரசே ஏற்க வேண்டும்.
5. காரணம் எதுவாக இருந்தாலும், தன்னுடைய பணியிலிருந்த பத்திரிக்கையாளரைத் தாக்கியவர்கள் மீது, காவல்துறை கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். தாக்குதலுக்குள்ளான பத்திரிக்கையாளருக்கு உரிய சிகிச்சையளிக்கவும், நிவாரணத் தொகை வழங்கவும் தமிழக அரசு உத்தரவிடவேண்டும்.
6. தாக்கப்பட்ட பட்டியல் சாதியைச் சார்ந்தவர்களுக்கு, வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ், நிவாரணத் தொகையில் முதல் தவணையாக ரூ. 50,000 கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகையும் குறித்த காலத்தில் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
7. மாவட்ட நிர்வாகத்தின் வழிகாட்டுதலில் ஏற்கனவே மனநல மருத்துவக்குழு பட்டியல் சாதியைச் சார்ந்த பகுதிகளுக்கு வந்து சென்றுள்ளது என்றாலும், மனவியல் ரீதியாக இந்தத் தாக்குதலின் கொடூரங்களிலிருந்து விடுபடும் வரை, தேவைப்படும் இருதரப்பினரையும் கண்டறிந்து முழுமையான மனநல மருத்துவச் சிகிச்சையளிக்க வேண்டும்.
8. இருதரப்பிலும் பெண்களின் கண்ணியத்துக்கு வார்த்தைகள்/ செயல்கள் மூலம் ஊறு விளைவித்த அனைவரையும் கண்டறிந்து, அவர்கள் மீது தகுந்த வழக்குகள் பதிவு செய்யப்பட வேண்டும்.

9. மாவட்ட நிர்வாகம், தகுந்த அதிகாரிகளைக் கொண்ட சமாதானக் குழு ஒன்றை அமைத்து, இரு சமூகத்திலும் உள்ள முக்கியமான தலைவர்கள், இளைஞர்கள், பெண்களை அடையாளம் காண வேண்டும். இதை ஒரு வாய்ப்பாகக் கருதி அவர்களுடன் தொடர்ந்து உரையாடி, சமூக நல்லிணக்கத்திற்கு வித்திடும் முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும். குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் கட்சி/ சாதியைத் தாண்டிய சமூக அக்கறை உருவாக்குவதற்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.
10. சாதி அமைப்புக்களும், கட்சிகளும் தங்கள் அரசியல் லாபங்களைத் தாண்டி, சமூக நல்லிணக்கத்திற்கு வித்திடும் முயற்சிகளைக் கைக்கொள்ள வேண்டும். ‘முன்னேர் எப்படியோ, பின்னேரும் அப்படியே’ என்பதைப் போல, இரு சாதியைச் சார்ந்த முக்கியத் தலைவர்களும், பகைமையை மறந்து, சமூக நல்லிணக்கத்திற்கு வழிகாட்டிகளாக இருந்தால், இரு தரப்பு மக்களும் அதைப் பின்பற்றும் வாய்ப்பு அதிகம்.
11. தமிழ்நாடு விடுதலைப் படையின் தலைவரான மறைந்த திரு. தமிழரசன் அவர்களின் வழிமுறையில் நமக்கு மாற்றுக் கருத்து இருந்தபோதும், பொன்பரப்பிப் பகுதியில் சமூக நல்லிணக்கத்திற்காக அவர் முக்கியப் பணியாற்றியுள்ளார் என்பதை மறுக்கவியலாது. இது இடதுசாரி, பெரியாரிய, தமிழ்த்தேசிய கொள்கைகளின் படி செயல்படும் அமைப்புக்கள், சாதிமுரண்கள் மிகுந்த கிராமப்புறப் பகுதிகளில், சனநாயக முறையில், ஆழமாக இறங்கி வேலை செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது. இல்லையெனில் மக்கள் சாதி, மத அமைப்புக்களின் சதி வலையில் வீழ்வதைத் தடுக்க முடியாது.
12. பொன்பரப்பி அரசு மேல்நிலைப் பள்ளியில், தீண்டாமை நிலவுகிறது என்றக் குற்றச் சாட்டை, அரியலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி விசாரித்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்ட ஆட்சியரும், இது முறையாக நடப்பதை உறுதி செய்ய வேண்டும். பொன்பரப்பி பட்டியல் சாதி மக்கள் வசிக்கும் பகுதியிலுள்ள அரசு நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும் என்ற அந்த மக்களின் கோரிக்கையைப் பரிசீலனை செய்து, மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
13. பள்ளிப் பருவத்திலிருந்தே மாணவர்களுக்கு, சாதி ஒழிப்பை ஊக்குவிக்கும் வகையிலும், மனிதநேயத்தை முன்னிறுத்தும் வகையிலும், பாடத்திட்டங்களையும், பயிற்சிகளையும் தமிழக அரசு வடிவமைத்து நடைமுறைப் படுத்த வேண்டும்.

**புகைப்படங்களுக்குப் பார்க்க**:

https://drive.google.com/open?id=1T2B7iyNjsSyMA7GHUOPuvTI3DJkwCGbh

**பிற்சேர்க்கை-1**

**<u>செந்துறை காவல் நிலைய குற்ற எண் 74/19 வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் விவரம்</u>**

1. முருகேசன், 75/19, த/பெ. பூராசாமி ஞானியார், பொன்பரப்பி
2. அருள்மணி, 36/19, த/பெ. இளங்கோவன், பொன்குடிக்காடு
3. ராஜேஷ், 30/19, த/பெ. சீனிவாசன், பொன்குடிக்காடு
4. அஜித், 22/19, த/பெ. மகேந்திரன், பொன்பரப்பி
5. வினோத், 26/19, த/பெ. கலையரசன், பொன்பரப்பி
6. விஜயக்குமார், 20/19, த/பெ. வீரமுத்து, பொன்பரப்பி
7. செல்வமுருகன் (எ) செல்வக்குமார், 22/19, த/பெ. கோபாலகிருஷ்ணன், பொன்பரப்பி
8. சங்கர், 46/19, த/பெ. பெருமாள், பொன்பரப்பி
9. திருக்குமரன், 37/19, த/பெ. செல்லமுத்து, பொன்பரப்பி
10. பிரேம்குமார் 25/19, த/பெ. கொளஞ்சிநாதன், பொன்பரப்பி
11. பாண்டியராஜன் 34/19, த/பெ. கலியபெருமாள், பொன்பரப்பி
12. ராஜா, 24/19, த/பெ. கண்ணதாசன், பொன்பரப்பி

**குறிப்பு:**

வழக்கின் நிலையைத் தொடர்ந்து கண்காணிக்கவும், ஆவணப்படுத்தவும் சனநாயக சக்திகளுக்கும், ஊடகங்களுக்கும் உதவும் என்பதாலேயே கைது செய்யப்பட்டுள்ளவர்களின் விவரங்களை இங்கு தந்துள்ளோம். மற்றபடி, இவர்கள் உண்மையிலேயே குற்றம் செய்தார்களா என்பதை நீதிமன்றமே முடிவு செய்ய வேண்டும். இந்தப் பட்டியலை அளித்ததன் மூலம், குற்றவாளிகளை அவமானப்படுத்தும் எந்த நோக்கமும் உண்மையறியும் குழுவிற்கு இல்லை.

**பிற்சேர்க்கை-2**

| வ.எ | பிரிவு | என்ன சொல்கிறது? | தண்டனை |
|---|---|---|---|
| இந்திய தண்டனைச் சட்டம், 1860 | | | |
| 1 | 147 | கலவரத்தில் ஈடுபட்டால் கிடைக்கும் தண்டனை | இரண்டாண்டுகள் வரை சிறைக்காவல் (அ) அபராதம் (அ) இரண்டும் |
| 2 | 148 | இறப்பை ஏற்படுத்தும் ஆயுதங்களுடன் கலவரத்தில் ஈடுபடுதல் | மூன்றாண்டுகள் வரை சிறைக்காவல் (அ) அபராதம் (அ) இரண்டும் |
| 3 | 294 (b) | பொது இடத்தில் ஆபாசமான வார்த்தைகள்/ பாடல்கள்/ நாட்டுப்புறக் கதைப்பாடல்களை உச்சரித்தல்/ பேசுதல் அல்லது பாடுதல் | 3 மாதங்கள் வரை சிறைக் காவல் (அ) அபராதம் (அ) இரண்டும் |
| 4 | 341 | ஒருவரை தவறான வகையில் பிடித்து வைப்பதற்கான தண்டனை | 1 மாதம் வரை சிறைக்காவல் (அ) 500 வரை அபராதம் (அ) இரண்டும் |
| 5 | 323 | தன்னிச்சையாக காயங்களை உண்டாக்குபவருக்கான தண்டனை (பிரிவு 334 தவிர்த்து) | ஓர் ஆண்டு வரை சிறைக்காவல் அல்லது ஆயிரம் ரூபாய்கள் வரை அபராதம் அல்லது இரண்டும் |
| 6 | 324 | பயங்கரமான ஆயுதங்கள் அல்லது வழிகளில் தன்னிச்சையாக காயங்களை ஏற்படுத்துதல் | மூன்றாண்டுகள் வரை சிறைக்காவல் (அ) அபராதம் (அ) இரண்டும் |
| 7 | 307 | கொலை முயற்சி (பிடியியல் குற்றம், பிணையில்லை) | கொலை முயற்சிக்கு 10 |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆண்டுகள் சிறைக் காவல் மற்றும் அபராதம், காயம் ஏற்பட்டால் ஆயுள் தண்டனை (அ) 10 ஆண்டுகள் சிறைக்காவல் மற்றும் அபராதம். குற்றவாளி ஆயுள் தண்டனைக் கைதியாக இருந்தால் மரண தண்டனை (அ) 10 ஆண்டுகள் சிறைக்காவல் மற்றும் அபராதம் |
| 8 | 506 (1) | குற்றமுறு அச்சுறுதல் | 2 ஆண்டுகள் சிறைக் காவல் (அ) அபராதம் (அ) இரண்டும் |
| 9 | 506 (2) | கொலை, கொடுங்காயம் ஏற்படுத்தும் வகையில் அச்சுறுத்தல் | 7 ஆண்டுகள் சிறைக் காவல் (அ) அபராதம் (அ) இரண்டும் |
| தமிழ்நாடு பொதுச்சொத்து (சேதம் & இழப்பைத் தடுத்தல்) சட்டம் 1992 | | | |
| 10 | 3 | பொதுச் சொத்துக்களுக்கு பல்வேறு வழிகளில் தீங்கு விளைவித்தல் | நீதிமன்றம் சிறப்புக் காரணங்களுக்காக குறைவான காலத்தைக் குறிப்பிட்டாலொழிய 1 முதல் 5 வருடங்கள் வரை சிறைக்காவல் |

| | | | |
|---|---|---|---|
| | | | மற்றும் அபராதம் |
| **பட்டியல் சாதி மற்றும் பட்டியல் பழங்குடிகள் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம், 2015** | | | |
| 11 | 3 (1) (r) | பொதுமக்கள் பார்வையில் படும்படி, பட்டியல்பிரிவு அல்லாதவர்கள், பட்டியல் சாதி மற்றும் பட்டியல் பழங்குடியினரை அவமானப்படுத்தும் நோக்கத்துடன் வேண்டுமென்றே சீண்டுதல் மற்றும் அச்சுறுத்துதல் | 6 மாதம் முதம் 5 ஆண்டுகள் வரை சிறைக்காவல் மற்றும் அபராதம் |
| 12 | 3 (1) (s) | பொதுமக்கள் பார்வையில் படும்படி, பட்டியல்பிரிவு அல்லாதவர்கள், பட்டியல் சாதி மற்றும் பட்டியல் பழங்குடியினரைச் சாதிப் பெயரைச் சொல்லி ஏசுதல் | 6 மாதம் முதம் 5 ஆண்டுகள் வரை சிறைக்காவல் மற்றும் அபராதம் |
| 13 | 3 (2) (va) | பட்டியல் சாதி மற்றும் பட்டியல் பழங்குடியினர் என்று தெரிந்தும் அவரின் மீதோ, அவருடைய சொத்தின் மீதோ வரையறுக்கப்பட்ட குற்றங்களைச் செய்தல் | இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் தண்டனை மற்றும் அபராதம் |
| **பெண்களைத் துன்புறுத்தல் தடுப்புச் சட்டம் 2002** | | | |
| 14 | 4 | எந்தவொரு இடத்திலும் பெண்களைத் துன்புறுத்தும் செயலில் ஈடுபடுதல், பங்கேற்றல், உடந்தையாக இருத்தல் | 3 வருடச் சிறைக்காவல் மற்றும் 10,000 ரூபாய்க்கு குறையாமல் அபராதம் |



**(க. சரவணன்)**
**உண்மையறியும் குழுவிற்காக**